# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2113/59 - 2019 මාර්තු මස 07 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.03.07

*2113/59 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்***

*32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழான பணிப்புரை*

*தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாந்து ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 32(ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் மேசைப்பந்தாட்டம் (டேபல் டென்னிஸ்) விளையாட்டு தொடர்பான தேசிய சங்கமான இலங்கை மேசைப்பந்தாட்ட (டேபல் டென்னிஸ்) சங்கத்தின் பதிவினை உடன் செயற்படும் வண்ணம் இடைநிறுத்துவதுடன், தற்காலிக செயலொழுங்காக அச்சங்கத்தின் நடவடிக்கைகளை மேலும் நடாத்திச் செல்லுவதன் பொருட்டு கீழ்வரும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபையினை நியமனஞ் செய்கின்றேன் :*

1. *திரு. கால்லலியனகே சஜித் ஜயலால் - தலைவர்*
2. *மருத்துவர் தம்மிக்க சேனாநாயக்க - செயலாளர்*
3. *திருமதி காரியவசம் தெவராகோட்டகே அயன்தி சாலிக்கா காரியவசம் - பொருளாளர்*

*மேலும், இலங்கை மேசைப்பந்தாட்டச் (டேபல் டென்னிஸ்) சங்கத்தின் உத்தியோகபூர்வ தேர்தலினை நடாத்துவதன் பொருட்டு 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்ப அச்சங்கத்தின் விசேட பொதுக் கூட்டத்தினைக் கூட்டி அதன் வாயிலாக தேர்தல் குழுவொன்றினை நியமனஞ் செய்வதனை விளையாட்டு அபிவிருத்தித்*

*திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின்கீழ் நிகழ்த்துவதற்கும் தேர்தல் குழுவின் வாயிலாக தேர்தலுக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் நடாத்துதல் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் நிகழ்த்துவதற்கும் அதிகாரம் அளிக்கின்றேன்.*

ஹரீன் பெர்ணாந்து (பா. உ.),
தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2019, மாச்சு 01.*

*03-1021/1*

---

**1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம்**

*32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழான பணிப்புரை*

*தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரீன் பெர்ணாந்து ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டத்தின் 32(ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் இலங்கை உடல் விருத்தி மற்றும் உடற்றகைமைகள் சம்மேளனம் அத்துடன் இலங்கை வலு உயர்த்துவோர் (பவர் லிப்டிங்) சம்மேளனம் என்பனவற்றின் பதிவுகளை உடன் செயற்படும் வண்ணம் இடைநிறுத்துவதுடன், தற்காலிக செயலொழுங்காக அச்சம்மேளனங்களின் நடவடிக்கைகளை மேலும் நடாத்திச் செல்லுவதன் பொருட்டு கீழ்வரும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபைகளை நியமனஞ் செய்கின்றேன் :*

*இலங்கை உடல் விருத்தி மற்றும் உடற்றகைமைகள் சம்மேளனம் தொடர்பாக நியமனஞ் செய்யப்படும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபை :*

1. மகேஸ் கம்மன்பில - தலைவர்
2. திருமதி சிரோமி ரணவக்க - செயலாளர்
3. திரு. பீ. பி. ஜயத்திலக்க - பொருளாளர்

*இலங்கை வலு உயர்த்துவோர் சம்மேளனம் தொடர்பாக நியமனஞ் செய்யப்படும் இடைக்கால கட்டுப்பாட்டுச் சபை :*

1. மருத்துவர் லால் ஏக்கநாயக்க - தலைவர்
2. திருமதி லக்மினி சமரசிங்க - செயலாளர்
3. திரு. ரவீந்ர குமார - பொருளாளர்

*மேலும், இலங்கை உடல் விருத்தி மற்றும் உடற்றகைமைகள் சம்மேளனம் அத்துடன் இலங்கை வலு உயர்த்துவோர் சம்மேளனம் என்பனவற்றின் உத்தியோகபூர்வ தேர்தலினை நடாத்துவதன் பொருட்டு 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, விளையாட்டுக்கள் சட்டம் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட பிரமாணங்களுக்கு ஏற்ப அச்சம்மேளனங்களின் விசேட பொதுக் கூட்டத்தினைக் கூட்டி அதன் வாயிலாக தேர்தல் குழுவொன்றினை நியமனஞ் செய்வதனை விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின்கீழ் நிகழ்த்துவதற்கும் தேர்தல் குழுவின் வாயிலாக தேர்தலுக்கு அழைப்பு விடுத்தல் மற்றும் நடாத்துதல் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் நிகழ்த்துவதற்கும் அதிகாரம் அளிக்கின்றேன்.*

ஹரீன் பெர்ணாந்து (பா. உ.),
தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்.

கொழும்பு,
*2019, மாச்சு 01.*

*03-1021/2*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.